**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – 2017–18 ஆம் நிதியாண்டில் பார்வைத்திறன் குறையுடைய மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு தேர்வு எழுத உதவுபவர்களையும் செவித்திறன் குறையுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு சைகை மொழியினால் தகவல் பரிமாற்றம் செய்ய உதவுபவர்களையும் குழுக்களாக அமைத்து உதவுவதற்கான வளமையம் அமைத்து அவர்களுக்கு ஊக்கத் தொகை ஊதியம் வழங்குதல் ரூ.5.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1டி) எண்.64

நாள்: 08–09–2017
ஹேவிளம்பி, ஆவணி 23,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டது:-

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் (மு.கூ.பொ) ந.க.எண்.2998/ சி.ப.2/2017, நாள் 01.07.2017.

---

**ஆணை:**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களால் 24.06.2017 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஏனையவற்றுடன் பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:–

‘‘தமிழக அரசு மாற்றுத்திறனாளிகள் நலனில் பெரிதும் அக்கறை கொண்டு, அவர்களுடைய முழுமையான மறுவாழ்விற்கு உகந்த சிறந்த முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. பார்வையற்ற மாணவர்களுக்கு தேர்வு எழுத உதவியாளர்களின் தேவை அவசியமாகிறது. அதைப் போல செவித்திறன் குறையுடையோருக்கும் பிறருடன் தகவல் பரிமாற்றத்தின்போது அவர்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் சைகை மொழிபெயர்ப்பாளரின் உதவியும் பெரிதும் தேவைப்படுகிறது. எனவே பார்வையற்ற மாணவர்களுக்கும் செவித்திறன் குறையுடையோருக்கும் உதவி செய்யும் வகையில் அவர்களுக்கு உதவி செய்பவர்களுக்கான விவரப்பட்டியலை தொகுத்து தேவைப்படும் சூழ்நிலையில், அதாவது தேர்வு எழுதும் மையங்களுக்கும் கருத்தரங்குகளுக்கும் அனுப்புவதற்கு ஏதுவாக வளமையம் அமைத்தல் அவசியமாகிறது. எனவே, **மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** இத்திட்டம் ரூ.5.00 இலட்சம் நிதி செலவில் செயல்படுத்தப்படும்.

2. மேலே படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், தமது கருத்துருவில், மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, 2017–18 ஆம் நிதியாண்டில் பார்வைத்திறன் குறையுடைய மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு தேர்வு எழுத உதவுபவர்களையும் செவித்திறன் குறையுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு சைகை மொழியினால் தகவல் பரிமாற்றம் செய்ய உதவுபவர்களையும் குழுக்களாக அமைத்து உதவுவதற்கான வளமையம் அமைத்து அவர்களுக்கு ஊக்கத் தொகை ஊதியம் வழங்குதல் ரூ.5.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்கள் அறிவிப்பினை தொடர்ந்து மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2017–2018 ஆம் நிதியாண்டில் பார்வைத்திறன் குறையுடைய மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கும், செவித்திறன் குறையுடைய மாற்றுத்திறனாளிகளுக்கும் உதவி செய்யும் வகையில் அவர்களுக்கு உதவி செய்பவர்களுக்கான விவரப்பட்டியலை தொகுத்து தேவை ஏற்படும் சூழலில், அதாவது தேர்வு எழுதும் மையங்களுக்கும், கருத்தரங்குகளுக்கும் தேவை ஏற்படும் தருணங்களில் அனுப்புவதற்கு ஏதுவாக வளமையம் அமைத்திடவும், மாவட்டம் ஒன்றிற்கான நிதித் தேவை ரூ.15,600/– என்ற வீதத்தில் அவர்களுக்கான ஊக்கத் தொகை / ஊதியம் வழங்கிட ஏதுவாக ரூ.4,99,200/– (ரூபாய் நான்கு இலட்சத்து தொண்ணூற்றி ஒன்பதாயிரத்து இருநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் –101. மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் - CS பார்வையற்றோர் பள்ளி மாணவர்களுக்கு எழுத்தர் உதவி அளித்தலும் உதவி ஆட்களுக்கான செலவுகளும் – 33 தொழில்முறை சிறப்பு பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 02 ஊதியம்".

(த.தொ.கு.2235 02 101 CS-3328)

5. தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.4,99,200/– 2017–18 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய நிதியொதுக்கத்தை எதிர்நோக்கி, மேலே பத்தி–3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் மேற்கண்ட செலவினத் தொகையை 2017–18 ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை உரிய நேரத்தில் நிதித்(சந) துறைக்கு அனுப்பும் போது தவறாது சேர்க்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.43914/நிதி(சந)/2017, நாள் 04.09.2017ல் கண்டுள்ள ஒத்திசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1330 (ஆயிரத்து முன்னூற்று முப்பது) வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் (மு.கூ.பொ.), சென்னை–5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
முதன்மை மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்:**
நிதித் (சந/வ.செ.பொது–II) துறை, சென்னை–9
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.